கழக வெளியீடு, ௧௧௫௮

[ஐந்தாம் புத்தகம்]

ஆசிரியர் :

N K வேலன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி - 6. சென்னை - 1.
1963

என். குழந்தைவேலன் (1907)

© 1963 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED,

Ed 1 Aug 1963

P31,J9(5)
w3K3·5

AYAL NATTUK KATHAIKAL - V

Appar Achakam, Madras - 1.

பதிப்புரை

அயல்நாட்டுக் கதைகள் என்னும் கழகச் சிறுகதை வரிசையில் இது ஐந்தாம் புத்தகமாகும். இளைஞர்க்கேற்ற இனிய கதைகள் பலவற்றை எழுதியுதவிய திரு. என். கே. வேலன் அவர்களே இச் சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

கழகவழி வெளிவந்துள்ள பிற கதை நூல்களைப் போலவே இதனையும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் வாங்கிச் சிறுவர்கள் படித்து மகிழுமாறு செய்வார்களென நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
1.	சிரிக்கும் பொம்மை	1
2.	மரம் கொத்திக் குருவி	7
3.	பாம்பும் வேடனும்	13
4.	பனிக்கட்டி மனிதன்	22

சிரிக்கும் பொம்மை

ஒரு பெரிய காட்டின் ஓரத்தில் ஒரு பெரிய ஏரி இருந்தது. ஏரிக்கரையில் வேடர்களின் தலைவன் வசித்திருந்தான். அவன் போரில் மாண்டுபோனான். அவனுடைய மனைவியும் மகளும் ஒரு குடிசை வீட்டில் வசித்திருந்தனர்.

வேடனுடைய மகள் மிகவும் அழகாய் இருந்தாள். பகைவர்கள் அவளைத் தூக்கிக்கொண்டு போய் விடுவார்கள் என்று தாய் அஞ்சினாள். அவளை ஒரு சிறிய படகில் வைத்து ஏரியில் மிதக்க விட்டாள். அந்தப் பெண் எப்பொழுதும்

சிரித்துக் கொண்டே இருப்பாள். அத ஞல் அவளுக்குச் சிரிக்கும் பொம்மை என்று பெயரிட்டாள்.

ஒருநாள் சிரிக்கும் பொம்மை ஏரிக் கரையில் உலவிக் கொண்டிருந்தாள். ஓர் அழகிய வாலிபன் அந்த வழியாக வந்தான். சிரிக்கும் பொம்மையைப் பார்த்தான். அவளை மணம் செய்து கொள்ளவேண்டும் என்று எண்ணம் கொண்டான்.

பெண்ணின் தாயிடம் சென்று கேட்டான். "பெண்கொடுக்க முடியாது ஓடிப்போ," என்று அவள் சொல்லி விட்டாள். அவன் தன் தந்தையிடம் சென்று முறையிட்டான். தந்தை ஒரு பெரிய போர்வீரர். அவருக்குக் கோபம் வந்தது.

"அவள் கர்வத்தை அடக்குகிறேன் பார்!" என்ருர்.

முழு நிலவு வந்தது. ஏரிக்கரையில் போய் நின்ருர். ஒரு மந்திரத்தை உச் சரித்தார். புயல் காற்று வந்தது. தண் ணீரில் பெரிய அலைகள் வந்தன. சிரிக்

கும் பொம்மையின் படகு காற்றில் அடித்துக் கொண்டுபோய் மேற்குக் கரையில் சாய்ந்தது.

அங்கே ஒரு பூதம் வந்தது. அதைக் கண்டு சிரிக்கும் பொம்மை நடு நடுங்கிஞள்.

"உன்னை நான் துன்புறுத்தமாட்டேன். நீ பசியோடு இருக்கிருய். என்

ஞுடன் வா. உனக்கு நல்ல உணவு தருகிறேன்," என்று பூதம் கூறிற்று.

சிரிக்கும் பொம்மை பூதத்தின் வீட்டிற்குச் சென்ருள். பூதம் அவளைத் தொந்தரவு செய்யவில்லை. அவளுக்கு வேண்டிய உணவு கொடுத்து அவளை

ஊட்டி வளர்த்தது. அவளை விழுங்கிவிட வேண்டும் என்று எண்ணி இருந்தது.

சிரிக்கும் பொம்மையைக் காணமல் அவளுடைய தாய் அழுது புலம்பினாள். ஊணுறக்கமின்றி அவளைத் தேடி அலைந்தாள். ஏரிக்கரையில் வந்து கூப்பாடு போட்டாள். நீர்த்தேவதைகள் அவளைக் கண்டு இரக்கப்பட்டன.

"உனக்குஎன்னவேண்டும்?" என்று கேட்டன.

"என் மகளை என்னிடம் கொண்டு வந்து சேர்த்து விடுங்கள். இவ்வுலகில் அவளைத் தவிர எனக்கு வேறு துணை கிடையாது," என்று அழுதாள்.

நீர்த்தேவதைகள் மற்ருெரு புயல் உண்டாகும்படி செய்தன. மிகப் பெரிய அலைகள் வந்து பூதத்தின் வீட்டை அடித்துக் கொண்டு போய்விட்டன. பூதம் தண்ணீரில் மூழ்கி இறந்துபோய் விட்டது.

சிரிக்கும் பொம்மை தன் படகில் ஏறி உயிர்தப்பிப் பிழைத்தாள். புயல்

நின்றதும் படகு மிதந்து வந்து அவள் வீட்டின் பக்கம் ஒதுங்கிற்று.

தாய் மகளைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தாள். ஆனால் சிரிக்கும் பொம்மையின் அழகு மறைந்துவிட்டது. அழகு இல்லை என்றாலும் உயிரோடு திரும்பி வந்ததை எண்ணி அவளுடைய தாய் மனம் மகிழ்ந்தாள்.

ஆனால் சிரிக்கும் பொம்மை தன் அழகுபோய்விட்டதே என்று வருத்தம் அடைந்தாள். கண்ணீர் பெருக்கினாள். ஏரிக்கரையில் முன்னால் சந்தித்த வாலிபன் ஒருநாள் அவள் எதிரில் வந்தான். அவள் ஓடி ஒளிந்துகொண்டாள். ஒவ்வொரு நாளும் அவளைக் காணவேண்டும் என்று ஆவலுடன் வந்தான். அவள் முகத்தையே பார்க்க முடியவில்லை.

ஒருநாள் முகத்தை மறைத்துக் கொண்டு அவன் எதிரில் வந்தாள்.

"ஏன் என்னைக் கண்டால் ஓடிவிடுகிறாய்? நான் புலியா சிங்கமா?" என்று கேட்டான்.

"வேறு ஒன்றுமில்லை. என்னுடைய அழகெல்லாம் போய்விட்டது. அதனால் வெட்கப்படுகிறேன்!" என்றாள்.

"அதனால் என்ன? நீ எப்பொழுதும் சிரித்துக்கொண்டே இருப்பாய்; உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது. உன் அழகைப் பற்றிக் கவலை இல்லை," என்று சொன்னான்.

"என் முகத்தைப் பாருங்கள்," என்று முக்காட்டை எடுத்தாள். "இப்பொழுது என் முகம் எப்படி இருக்கிறது?" என்றாள்.

"உன் முகம் முழு நிலாவைப் போல் அழகாக இருக்கின்றது. உன்னைப் போன்ற அழகி இவ்வுலகிலேயே கிடையாது," என்றான்.

உண்மையிலேயே அவள் முகம் மாறிவிட்டது. நீர்த்தேவதைகளின் கருணையால் அவள் மீண்டும் தன் அழகைப் பெற்றுவிட்டாள்.

மரம் கொத்திக் குருவி



ஓர் ஊரில் ஒரு பையன் இருந்தான். அவன் பெயர் மேகநாதன். அவன் ஒரு பெரிய வீரனாக வரவேண்டும் என்று அவனுடைய அப்பா ஆசைப்பட்டார். அதற்காக அவர் பல சோதனைகள் செய்தார்.

காட்டில் தனிமையாகச் சென்று பல நாட்கள்வரை பட்டினியாகப் படுத்திருக்கும்படி செய்தார். ஒரு பெரிய மரத்தின் கிளையில் பாயை விரித்து அதன்மேல் அவனைப் படுக்கவைத்தார்.

"இந்த இடத்தைவிட்டு நீ அசையக்கூடாது. ஒன்றும் சாப்பிடக் கூடாது. நீர் அருந்தவும் கூடாது. மழை நீர் வாயில் வந்து விழுந்தாலும் அதைக் குடிக்கக் கூடாது," என்று கட்டளை இட்டார்.

மேகநாதன் பாயில் படுத்துக் கொண்டான். இரண்டு மூன்று நாட்கள் வரை பட்டினியாக இருந்தான். பசியினால் மயங்கிக் கிடந்தான். அவனுக்கு ஒரு கனவு வந்தது.

காட்டு எருமைகள் கூட்டம் கூட்டமாக வந்தன. அவன் கையில் ஆயுதம் ஒன்றுமில்லை. ஓடிப் போகலாமா என்று பார்த்தான். கைகால்கள் கட்டிப் போட்டவைபோல் இருந்தன. அவனால் அசைய முடியவில்லை. மேகத்திலிருந்து ஒரு தேவன் இறங்கிவந்தான். அவன் மரக்கிளையில் வந்து அமர்ந்து, "தம்பி! ஏன் நடுங்குகிறாய்?" என்றான்.

"நீங்கள் என் அருகில் இருக்கும் போது நான் ஏன் அஞ்சவேண்டும்?" என்றான் மேகநாதன்.

"நீ ஏன் மரக்கிளையில் படுத்துக் கிடக்கிறாய்?" என்றான் தேவன்.

"அப்பா என்னை இங்கே அழைத்து வந்தார். என்னைச் சோதித்துப் பார்க்கிறார்," என்று மேகநாதன் கூறினான்.

"மிகவும் நல்லது. என்னுடன் வா!" என்று தேவன் அழைத்தான்.

மேகநாதன் எழுந்து நின்றான். தேவன் அவனுடைய கையைப் பிடித்து அழைத்துச் சென்றான். இருவரும் காற்றில் மிதந்து சென்றனர். ஒரு மலையின் உச்சிக்கு வந்து சேர்ந்தனர். மலையின் உச்சி மேகத்தில் மறைந்திருந்தது.

அங்கே ஓர் அழகிய மண்டபம் இருந்தது. இருவரும் அதன் உள்ளே சென்றனர். ஒரு பெரிய மேடையின் மேல் நான்கு தேவர்கள் அமர்ந்திருந்தனர். மேகநாதனை அந்த மேடைமேல் அமரும்படி செய்தனர். அந்த மேடை அசைந்து ஆடி மேகத்திற்குள் சென்றது. மேகநாதன் இறங்கி ஓடிவிடலாம் என்று எழுந்திருந்தான். ஒரு தேவன் அவனைப் பிடித்து உட்காரவைத்தான்.

மேடை ஓரிடத்தில் வந்து அசையாமல் நின்றது. தேவர்கள் கூட்டம் கூட்டமாக மேகநாதனைப் பார்க்க வந்தனர். ஒரு தேவன் மேகநாதனை அருகில் அழைத்து "உன்னுடைய உலகம் கீழே தெரிகின்றது பார்!" என்றான்.

மேகநாதன் எட்டிப் பார்த்தான். பூமி பந்துபோல் உருண்டையாகத் தெரிந்தது. அற்புதமான காட்சியாக இருந்தது. அவன் மெய்ம்மறந்து அக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

"நீ கீழே போய் உன் உலகில் இருக்க வேண்டுமா? இப்பொழுது நாம் வந்திருக்கும் உலகில் இருக்கவேண்டுமா? அல்லது இதற்குமேல் உள்ள உலகிற்குப் போகவேண்டுமா?" என்று ஒரு தேவன் கேட்டான்.

"நான் மேல் உலகிற்குப் போக வேண்டும்," என்று மேகநாதன் விடை அளித்தான்.

நான்கு தேவர்களும் புன்முறுவல் செய்தனர். "சரி; அப்படியே ஆகட்டும்," என்றனர்.

அதற்கும் மேலே உள்ள உலகிற்குச் சென்றனர். ஓரிடத்தில் ஏழு தேவர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் நிற்காமல் இன்னும் மேலே செல்வதற்கு மேகநாதன் முயன்றான். மேலே போவது பறவைகள் காற்றில் பறந்து செல்வது போல் எளிதாக இருந்தது.

அங்கிருந்த தேவர்கள் மேகநாதனை அழைத்தார்கள். "இதற்குமேல் நீ போகக் கூடாது," என்று எச்சரிக்கை செய்தனர்.

மேகநாதன் அவர்கள் சொன்னதைக் கேட்கவில்லை. மேலே ஏறிச் சென்ருன். "போகாதே! திரும்பிவந்துவிடு" என்று அழைத்தார்கள். திரும்பிப் பாராமல் பறந்து சென்ருன். உடனே அவனுடைய இரண்டு கைகளும் இறக்கைகளாக மாறிவிட்டன. பறவையைப் போல் பறந்து சென்ருன். மனித உருவம் போய்விட்டது. மேகநாதன் ஒரு பறவையாக மாறிவிட்டான். பூமிக்கு இறங்கி வந்தான். அப்பறவை மரத்தைக் கொத்திக்கொண்டு திரிந்ததால் மக்கள் அதற்கு மரம் கொத்திக் குருவி என்று பெயரிட்டு அழைத்தனர்.

ஓர் ஊரில் ஒரு வேடன் இருந்தான். அவன் வேட்டையாடுவதில் மிகவும் கெட்டிக்காரன். வேடர்களுக்குத் தலைவனாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டான்.

"அப்படியானால் நீ நடு இரவில் ஏரியில் இறங்கித் தண்ணீரைத் தடியால் அடிக்கவேண்டும்," என்று ஒரு குரல் பேசிற்று. சுற்றும் முற்றும் பார்த்தான். ஒருவரையும் காணோம்.

"தண்ணீர்க் கடவுள் வருவார். நீ கேட்ட வரம் தருவார்!" என்று குரல் வந்தது.

இரவில் உறங்கும்போதும் தண்ணீர்க் கடவுளைப்பற்றிக் கனவு வந்தது. மனைவியை எழுப்பினான். "உனக்கு ஏரிக் கரை பக்கத்திலிருந்து ஏதேனும் ஓசை கேட்டதா?" என்றான்.

"இலைகள் அசையும் ஓசைதான் சலசலவென்று கேட்கிறது," என்று சொல்லிவிட்டு அவள் மீண்டும் உறங்கினாள். வேடனுக்கு உறக்கம் வரவில்லை. ஏரியின் பக்கம் அவன் கால்கள் இழுத்தன. ஏரிக்கரையை நோக்கி ஓடினான். தண்ணீருக்குள் இறங்கினான்.

"தண்ணீர்க் கடவுளே தண்ணீர்க் கடவுளே வாரும்," என்று தண்ணீரைத் தடியால் அடித்தான். அவனுக்குத் தெரிந்த மந்திரங்களை ஓதினான். பாடிக் கொண்டு தண்ணீரில் தாளம் போட்டான். அந்த இடத்தில் ஒரு சுழல் தோன்றியது. அவன் முழங்கால் வரையில் இருந்த நீர்மட்டம் இடுப்பு வரையில் வந்தது. பிறகு கழுத்து வரையில் வந்துவிட்டது. அப்பொழுதும் அவன் தாளம் போடுவதை நிறுத்தவில்லை.

தண்ணீர்க் கடவுள் ஒரு பெரிய பாம்பின் வடிவத்துடன் மேலே வந்து பார்த்தார். பாம்பு தலையை உயர்த்தியதும் தண்ணீரில் கொந்தளிப்பு அடங்கிவிட்டது. பிறகு தண்ணீரும் குறைந்து பழைய நிலைக்கு வந்தது.

நீர்க் கடவுள் "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"நான் வேடர்களுக்கு எல்லாம் தலைவன் ஆகவேண்டும்," என்று கேட்டான். பாம்பின் தலையில் செக்கச் செவேல் என்று ஒரு பூ இருந்தது.

"என் தலையிலிருக்கும் பூவை எடுத்துக்கொள். அது உன்னிடம் இருந்தால் நீ நினைத்தது கிடைக்கும். அதற்குப் பதிலாக உன் குழந்தைகளில் ஒன்று எனக்குத் தரவேண்டும்!" என்று பாம்பு சொல்லிற்று.

அதற்கும் சரி என்று அவன் ஒப்புக் கொண்டான். பாம்பின் தலையிலிருந்த பூவைக கையில் எடுத்தான். அது சிவப்புத் தூள்போல் ஆய்விட்டது. குங்குமம்போல் இருந்தது.

"இதை என்ன செய்வது?" என்று வேடன் கேட்டான். "உனக்கு உடல் நலம் குறைந்தால் குங்குமத்தை நெற்றியில் அணிந்துகொள்ள வேண்டும். உடனே உடல் நலம் அடையும். குங்குமத்தைக் கீழே தூவினால் அந்த இடத்தில் உனக்கு வேண்டியது வந்து நிற்கும்," என்று பாம்பு சொல்லிற்று.

'பாம்பு வெளியில் வராது. குழந்தையைக் கொடுக்காவிட்டால் என்ன? வேண்டியதுதான் கிடைத்து விட்டதே' என்று வேடன் எண்ணினான்.

ஆனால் வீட்டிற்குப் போனபோது அவன் மனைவி அழுதுகொண்டு இருந்தாள். "பெரிய குழந்தை காணாமல் போய் விட்டது," என்று அழுதாள். வேடன் மிகவும் வருத்தப்பட்டான். ஆயினும் அவனுடைய ஆசை எல்லாம் குங்குமத்தின் மகிமையில் இருந்தது. குங்குமத்தின் உதவியால் அவனுக்கு ஏராளமான பொருள்கள் கிடைத்தன. வேடர்களுக் கெல்லாம் தலைவனாக இருந்து ஆட்சி நடத்தினான்.

கையிலிருந்த குங்குமம் செலவாகி விட்டது. வேட அரசன் பாம்பினிடம் சென்ருன். அதனிடம் இருந்து குங்கு மம் வாங்கிக்கொண்டு வந்தான்.

வீட்டிற்குத் திரும்பி வந்ததும் "இரண்டாவது குழந்தையைக் காண வில்லை!" என்று மனைவி கதறினுள். வேடனுடைய மனம் கல்லாக மாறி விட்டது. பேராசையினுல் தன் குழந் தைகளை எல்லாம் ஒன்றின்பின் ஒன்ருக இழந்துபோனுன். முடிவில் தன் மனை வியையும் பறிகொடுத்தான்.

ஆசைக்கு ஓர் அளவில்லை. குங்கு மம் தீர்ந்த பிறகு பாம்பிடம் சென்ருன். குங்குமம் கிடைக்கவில்லை. கையில் இருந்த பொருள்கள் எல்லாம் கரைந்து விட்டன. பழையபடி வேட்டைக்காரன் ஆனுன். வேட்டையிலும் அவனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. அவன் சென்ற இடமெல்லாம் தோல்விதான் கிடைத் தது. உடம்பு இளைத்து நோயால் வாடினுன். மற்ற வேடர்கள் அவனைப் பார்த்து நகைத்தனர்.

ஒருநாள் வேடன் ஒரு புறுவை உயிருடன் பிடித்தான். அதைக் கொல்லப் பார்த்தான்.

"அப்பா! என்னைக் கொல்ல வேண்டாம்," என்று புறு கெஞ்சிற்று.

புறு பேசுவதைக் கேட்டு அவன் வியப்புற்றான்.

"நீ என்னுடைய குழந்தையா?" என்று அதனிடம் கேட்டான். "ஆம். உங்களுடைய குழந்தைதான்," என்று புறு சொல்லிற்று. "தண்ணீர்க் கடவுள் எங்களை எல்லாம் புறுக்களாக மாற்றி விட்டார்!" என்று தெரிவித்தது.

"என்ன தவறு செய்துவிட்டேன்! எனக்குச் சரியான தண்டனை கிடைத்து விட்டது," என்று அழுதான். தண்ணீர்க் கடவுளிடம்போய் மன்னிப்புக் கேட்கலாம் என்று நினைத்தான்.

நேராக ஏரிக்கரைக்குச் சென்றான். தண்ணீரைத் தட்டினான். பாம்பு வெளியில் வந்தது. "என்ன வேண்டும்?" என்று கோபத்துடன் கேட்டது.

"என் மனைவியையும் மக்களையும் என்னிடம் கொடுத்து விடுங்கள். நான் பேராசையை ஒழித்து நல்லவனாக நடக்கிறேன்," என்று கெஞ்சினான்.

"நீ பணக்காரனாக இருக்கும் பொழுது உன் கண்கள் மூடிப்போய் விட்டன. நீ இழந்துபோன பொருள்களை அவ்வளவு எளிதில் பெறமுடியுமா?" என்று பாம்பு கேட்டது.

"தெரியாமல் ஏதோ தவறு செய்து விட்டேன். தாங்கள் தாம் என்னை மன்னிக்கவேண்டும். இனிமேல் ஒழுங்காக இருப்பேன்," என்று வாக்குறுதி அளித்தான்.

"ஒரே ஒரு வழி இருக்கின்றது. நீ ஏழு ஆண்டுகள் பாம்பு உருவத்துடன் இருக்க வேண்டும்!" என்று தண்ணீர்ப் பாம்பு சொல்லிற்று.

"அப்படியே ஆகட்டும்," என்ருன்.

"அந்த ஏழு ஆண்டுகளும் நீ எனக்கு அடிமையாக இருக்கவேண்டும். கடலிலிருந்து முத்து எடுத்துவரவேண்டும். பூமிக்குள்ளிருந்து விலை உயர்ந்த கற்களை எடுத்து வரவேண்டும். நீ நல்ல வேலை செய்தால் ஏழு ஆண்டுகளில் உனக்கு விடுதலை கிடைக்கும்; பிறகு மனைவி மக்களுடன் வாழலாம்," என்றது பாம்பு.

"என்ன வேலை கொடுத்தாலும் செய்கிறேன். அன்பில்லாத உயிர் வாழ்க்கை எனக்கு வேண்டாம்," என்ருன்.

உடனே பாம்பாக மாறிஞன். ஏழு ஆண்டுகள் கடலில் மூழ்கி முத்து எடுத்தான். பூமியைத் தோண்டி விலை உயர்ந்த கற்களைக் கொண்டு வந்து குவித்தான். ஓய்ந்த நேரங்களில் பாம்பு உருவில் இருக்கும் வேடன் ஏரிக்கரைக்கு

வருவான். புறுவாக இருக்கும் மனைவியுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருப்பான்.

"இன்றைய பொழுது கழிந்தது. ஏழு ஆண்டுகளும் இப்படியே ஓடிவிடும். பிறகு நமக்கு விடுதலை கிடைத்துவிடும்," என்று சொல்வான்!

அவன் சொன்னபடியே ஏழு ஆண்டுகள் சுழன்று ஓடின. வேடனுக்குப் பழைய உருவம் வந்தது.

"உன் சாபம் நீங்கிவிட்டது. நீ வீட்டிற்குப் போகலாம். உன் மனைவியும் குழந்தைகளும் வீட்டில் இருப்பார்கள்," என்று தண்ணீர்க் கடவுள் சொன்னார்.

வேடன் வீட்டிற்குச் சென்றான். அவன் மனைவி உணவு சமைத்துக் கொண்டு இருந்தாள். குழந்தைகள் அவனிடம் அன்புடன் ஓடிவந்தன.

அவன் வேடர்களுக்குத் தலைவன் ஆனான். மனைவிமக்களுடன் இன்பமாகக் காலம் கழித்து வந்தான்.



மலைமேல் பனிக்கட்டி உறைந்திருந்தது. பனி மிகுந்த இடத்தில் ஒரு சிறிய ஊர் இருந்தது. அந்த ஊரில் ஓர் அழகிய பெண் இருந்தாள். அவளை மணந்து கொள்ள வேண்டும் என்று பல வீரர்கள் ஆசைப்பட்டார்கள். அவள் தன்னைப் பற்றி வீண்பெருமை கொண்டிருந்தாள். அவள் பெயர் வெள்ளை அம்மாள்.

ஒரு நாள் பெண்பார்ப்பதற்குக் கறுப்பண்ணன் வந்தான். இளமை அழகு செல்வம் எல்லாம் அவனுக்கு இருந்தன. அவனையும் மணம் செய்து கொள்ள வெள்ளை அம்மாள் மறுத்து

விட்டாள். கறுப்பண்ணனுக்கு அவ மானமாக இருந்தது. அவளுக்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும் என்று முடிவு செய்தான்.

அவனுக்குச் சில மந்திரங்கள் தெரியும். பனிக்கட்டியால் ஒரு மனிதனைப் போல் பொம்மை செய்தான். அதற்குச் சட்டை போட்டு அழகு படுத்தினன். மந்திர சக்தியால் அதற்கு உயிர் கொடுத்தான். அந்தப் பொம்மை மனிதனைப்போல் பேசியது, உணவு அருந்தியது, நடந்து சென்றது. ஆனால் அது பனிக்கட்டியால் செய்யப்பட்டது. ஆதலால் அது வெயிலில் நின்றால் உருகி விடும். அனல் பட்டால் கரைந்து விடும்.

பனிக்கட்டி மனிதனுக்கு அழகப்பன் என்று பெயர் வைத்தான். அவன் ஒரு பெரிய வீரன் என்றும் அயலூரிலிருந்து தன்னைப் பார்க்க வந்திருப்பதாகவும் தன் நண்பர்களிடம் சொன்னன். ஒருநாள் அவன் அழகப்பனை வெள்ளை அம்மாள் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். வெள்ளை அம்மாளுடைய

தாயார் அவர்களை வரவேற்று விருந்தளித்தாள்.

வெள்ளையம்மாள் அழகப்பனைக் கண்டு மயங்கி விட்டாள். பனி மிகுதியாய் இருந்ததால் எல்லோரும் தீமூட்டி அதன் அருகில் அமர்ந்திருந்தனர். அழகப்பனுக்கு அங்கே உட்கார முடியவில்லை. உடல் உருகிவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சினான். சற்றுத் தொலைவில் போய் நின்றான்.

வெள்ளையம்மாளை மணந்து கொள்வதற்கு வந்திருப்பதாகத் தெரிவித்தான். அதற்கு வெள்ளை அம்மாளும் அவளுடைய பெற்றோர்களும் சம்மதித்தனர்.

"திருமணம் எங்கள் ஊரில்தான் நடக்கும். பெண்ணை என்னுடன் அனுப்புகிறீர்களா?" என்று கேட்டான்.

மலை நாட்டினருடைய வழக்கம் போல் பெண்ணைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

"நெடுந்தூரம் செல்லவேண்டும். ஆறுகளையும் மலைகளையும் கடந்து செல்ல

வேண்டும். உன்னால் நடக்க முடியுமா?'' என்று பெண்ணைக் கேட்டான்.

''நான் உங்களுக்குச் சொந்தமாகி விட்டேன். நீங்கள் என்னுடன் இருக்கும்போது எனக்கு என்ன கவலை?'' என்றாள்.

இருவரும் கரடு முரடான பாதைகளின் வழியாகச் சென்றனர். மேடு

பள்ளங்களும் புதர்களும் நிறைந்திருந்தன. வெள்ளையம்மாளுக்கு நடக்க முடியவில்லை. அழகப்பன் திரும்பிப் பாராமல் போய்க் கொண்டிருந்தான். வெள்ளையம்மாள் சற்றுப் பின் தங்

கிறுள். அதற்குள் அழகப்பன் நெடுந் தூரம் சென்று விட்டான். வெயில் ஏறி விட்டது. பனிக்கட்டியால் செய்யப் பட்ட அழகப்பன் சிறிது சிறிதாக உரு கத் தொடங்கினுன். உடல் உருகி ஒரு சிறிய ஆறுபோல் பாய்ந்தது. முதலில் தலை உருகிற்று. அப்பொழுதும் பனிக் கட்டி மனிதன் நடந்து கொண்டே இருந்தான்.

கைகள் உருகிக் கீழே விழுந்தன. கால்கள் மட்டும் நடந்து சென்றன. சற்றுநேரம் கழித்துக் கால்களும் உரு கின. அழகப்பன் கீழே சாய்ந்தான். அவன் விழுந்த இடத்தில் தண்ணீர் குட்டைபோல் நின்றது. அவனுடைய துணிமணிகளும் செருப்புகளும் தண் ணீரில் மிதந்து கொண்டு இருந்தன.

வெள்ளையம்மாள் ஓட்டமாக ஓடி வந்தாள். தண்ணீர் தேங்கி நிற்கும் இடத்திற்கு வந்தாள். அழகப்பனு டைய உடைகளைக் கண்டாள். கதறி அழுதாள். கொடிய விலங்குகள் அவ னைக் கொன்று தின்று விட்டன என்று

எண்ணினாள். அந்த இடத்தில் பறவைகள் வட்டமிட்டன.

"பனிக்கட்டி மனிதன் உருகி விட்டான். உண்மையான மனிதனை வேண்டாம் என்றாய். பொய்யான மனிதனை நம்பி வந்தாய்," என்று பறவைகள் அவளை ஏளனம் செய்தன.

வெள்ளையம்மாள் அந்த இடத்தை விட்டு ஓடிச் சென்றாள். காடுமேடெல்லாம் சுற்றி அலைந்தாள். அவளுக்கு வழி தெரியவில்லை. கறுப்பண்ணன் அவளைத் தேடிக் கொண்டு வந்தான். மூன்று நாட்கள் இரவும் பகலும் தேடிக் கொண்டே இருந்தான். காட்டில் ஒரு மரத்தடியில் அவள் மயங்கிக் கிடந்தாள்.

கறுப்பண்ணன் அவள் அருகில் சென்றான் உணவும் நீரும் கொடுத்து அவளுடைய மயக்கத்தைப் போக்கினான்.

"நான் உண்மையான மனிதன். உருகிப் போக மாட்டேன். உனக்காக என் உயிரைக் கொடுப்பேன். என்னு

டன் வருகிறாயா?'' என்று அன்புடன் கேட்டான்.

வெள்ளையம்மாள் மெதுவாக எழுந்து அவனுடன் சென்றாள். கறுப் பண்ணனை மணந்து கொண்டு குடும்பம் நடத்தினாள். நல்ல பெண்ணாக நடந்து கொண்டாள்.